**மாதிரி 3**

**பேருந்து நிறுத்தம் வேண்டி....**

**ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு ஊர்ப் பொதுமக்கள் விண்ணப்பம்**

*அனுப்புநர்:*

ஊர்ப் பொதுமக்கள்,
இருங்காட்டுக் கோட்டை,
திருப்பெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் – 602 119.

*பெறுநர்:*

ஊராட்சி ஒன்றியத் தலைவர் அவர்கள்,
ஊராட்சி ஒன்றியம்,
இருங்காட்டுக்கோட்டை,
திருப்பெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் – 602 119.

மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம்.

**பொருள்: இருங்காட்டுக் கோட்டையில் பேருந்து நிறுத்தம் வேண்டி, வேண்டுகோள்**

தண்டலம் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்து, இருங்காட்டுக்கோட்டை கிராமத்தில் வாழும் ஊர்ப் பொதுமக்களாகிய நாங்கள், எங்கள் ஊர்ப் பொதுமக்கள் சார்பாக இவ்வேண்டுகோள் விண்ணப்பத்தைத் தங்களுக்கு அனுப்புகிறோம். இதனைப் பரிவுடன் ஏற்று நிறைவேற்றுமாறு வேண்டுகிறோம்.

எங்கள் கிராமத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. வாழ்கின்ற மக்கள் நான்காயிரம் பேர் இருக்கலாம். ஆண்களும், பெண்களும் பெரும்பாலோர் வேலைக்குச் செல்கின்றோம். குழந்தைகள் பள்ளி, கல்லூரிக்குச் செல்கிறார்கள். யார் எங்கு செல்வதாக இருந்தாலும், தண்டலம் வரை நடந்து சென்றுதான் பேருந்தைப் பிடிக்க வேண்டி உள்ளது.

மழையிலும், வெய்யிலிலும், காலையிலும் இரவிலும் செல்வதற்குச் சிரமப்படுகிறோம். எனவே எங்கள் வேண்டுகோளைக் கருணைகூர்ந்து ஏற்று எங்கள் கிராமத்தில் ஒரு பேருந்து நிறுத்தத்தை

THE QUAIDE MILLETH COLLEGE FOR MEN

அமைத்துக்கொடுத்து நல்லுதவி செய்யுமாறு பணிவன்புடன் ஊர்ப் பொதுமக்கள் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்.

இருங்காட்டுக்கோட்டை
04.04.2014

இப்படிக்கு,
உண்மையுள்ள
ஊர்ப்பொதுமக்கள்
க. ஆறுமுகம்
ந. செல்வம்
அ. மாரிமுத்து
கி. கருப்பாயி
வ. வேலன்
ப. பழனி
க. குமார்

உறைமேல் முகவரி:

ஊராட்சி ஒன்றியத் தலைவர் அவர்கள்,
ஊராட்சி ஒன்றியம்,
இருங்காட்டுக்கோட்டை,
திருப்பெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் – 602 119.

THE QUAIDE MILLETH COLLEGE FOR MEN